# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளேடு

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை - 04 | 17-04-2003 | வியாழக்கிழமை | ஓசை 58



தேவையை நிறைவு செய்து நேரத்தை மீதுப்படுத்த புடைவைத் தெரிவுக்கு வவுனியா நகரில்...

SHANDHA TEX

பஜார் வீதி, வவுனியா.

T.P:24-22879 சி-7828


## வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்தோரின்

# மீள்குடியேற்றம், வீடுகள் நிர்மாணத்திற்கு 2000 கோடி ரூபா ஆரம்பத் தேவையென மதிப்பீடு

### இரண்டு இலட்சத்து இருபத்தேழாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தகவல்

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள இரண்டு இலட்சத்தி இருபத்தேழாயிரம் குடும்பங்களை மீளக்குடியமர்த்தவும், அவர்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் ஆரம்ப உதவியாகவும் ஏறக்குறைய 200 மில். அமெரிக்க டொலர் (சுமார் 2000 கோடி ரூபா) தேவையென மதிப்பீடு ஒன்றில் இருந்து தெரியவருகின்றது.**

புனர்வாழ்வு மீள் குடியமர்தல் மற்றும் அகதிகள் தொடர்பான அமைச்சும் ஐக்கியநாடுகள் சபையின் அகதிகளுக்கான ஆணையாளர் அலுவலகமும் ஒன்றிணைந்து நடத்திய ஆய்விலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற போரின் விளைவாக மூன்று இலட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு இலட்சத்து இருபத்தேழாயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

இடம் பெயர்ந்தவர்களில் 30 ஆயிரம் பேர் கணவனை இழந்தும் சுமார் ஐம்பதாயிரம் சிறுவர்கள் நலன்புரி நிலையங்களிலும் உள்ளனர். புனர்வாழ்வு மீள்குடியமர்தல் மற்றும் அகதிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பல்லே கொடவில் விமானப் படைக்கு புதிய விமான நிலையம் அமைக்க முடிவு!

(கொழும்பு)

பத்துகம பல்லேகொடவில் விமானப் படைக்கென புதிய விமான நிலையமொன்றை அமைக்கும் முயற்சியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது.

இதன் மூலம் இரத்மலானை விமான நிலையத்தைப் புதிதாக அமைக்கப்படவுள்ள இடத்துக்கு மாற்றுவது எனவும் அரசு தீர்மானித்துள்ளது.

அத்துடன் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அண்மித்ததாக இருக்கும் வான்படைப் பிரிவை அந்த இடத்தில் இருந்து அகற்றி புதிதாக அமைக்கப்படவுள்ள பத்துகம பல்லேகொட விமான நிலையத்துக்கு இடமாற்றவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த புதிய விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கும் முகமாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான அதிகாரிகள் குழுவினர் கடந்தவாரம் அவ்விடத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை அவதானித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெற சமாதானத்திற்கான பிரதிபலன் தேவை

### நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர்

இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபெற வேண்டுமானால் சமாதானத்திற்கான பிரதிபலன் அவசியம் என்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் வலியுறுத்தியுள்ளார்.

போர்நிறுத்தமும், ஏழு மாதங்களாக தொடரும் ஆக்கபூர்வமாக கலந்துரையாடல்களும் இலங்கையின் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பை மேம்படுத்தியுள்ளது என்று கூறிய அவர் பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட தரப் புக்கள் கடைப்பிடிக்கும் பொறுமை குறித்தும் கெல்கேசன் அவர்கள் வரவேற்பு தெரிவித்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## உலக வங்கித் தலைவர் இலங்கைக்கு விஜயம்!

(கொழும்பு)

உலக வங்கியின் தலைவர் ஜென் வூல்டன்சன் இவ்வருட முற்பகுதியில் இலங்கை வரவுள்ளதாக தெரிவித்துள்ளார். உலக வங்கியின் தலைமையத்தில் நேற்று சிறிலங்காவின் விஞ்ஞான, தொழில்நுட்பத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொடவை சந்தித்தபோது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

## பெற்றோரிடம் ஒப்படைப்பு!

(அலுவலக செய்தியாளர்)

வவுனியாவில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்துகொண்ட சிறுமி ஒருவர் பெற்றோரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, பூந்தோட்டத்தைச் சேர்ந்த 18 வயதிற்குக் குறைந்த இச்சிறுமி வவுனியா மாவட்ட

(08ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை பூபதி நினைவுநாள் மன்னாரில் சிறப்புற ஆரம்பம்

(மன்னார்)

தியாக தீபம் அன்னை பூபதியின் 15ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அஞ்சலி நிகழ்வு நேற்று மன்னார் நகரில் சிறப்புற இடம் பெற்றுள்ளது.

மன்னார் சிறுவர் பூங்காவில் இடம் பெற்ற இவ் அஞ்சலி நிகழ்ச்சிகளில் மன்னார் மாவட்டத்தில் இயங்கும் பல மாதர் அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்டனர். இதன்போது அடையாள உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த உண்ணாவிரதம் வரும் 19ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள அன்னைபூபதி நினைவு தினம் வரை தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

-வடக்கு - கிழக்குப் புனரமைப்பு-

## தனிமைப்படுத்திக் கொள்வது சாத்தியமானதொன்றல்ல!

### அமைச்சர் மிலிந்த மொறகொட

நாட்டை முழுமையாக அபிவிருத்திசெய்யும் நடைமுறையில் வடக்கு - கிழக்கின் புனரமைப்பை மாத்திரம் தனிமைப்படுத்திக் கொள்வது சாத்தியமாகாது என்று அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

சமாதான உடன்படிக்கை எட்டப்படும் வரையில் உதவிகள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு நகரில் வீதி ரோந்து அதிகரிப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் சிறிலங்கா இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்கான சம்பவத்தையடுத்து வீதி ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன.

இராணுவத்தினருடன் பொலிசாரும் இணைந்து நட வடிக்கையிலீடு பட்டுள்ளனர்.

## பொ.ஐ.முன்னணியுடன் அடுத்தமாதம் புரிந்துணர்வு உடன்பாடு எட்டப்படும்

### ஜே.வி.பி. தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணியுடன் அடுத்த மாதம் புரிந்துணர்வு உடன்பாடொன்று எட்டப்படும் என்று ஜே.வி.பி. அறி வித்துள்ளது.

இருகட்சிகளுக்கும் இடையில் முன்னர் இடம்பெற்ற பலகட்டப் பேச்சுக்கள் தமக்கு திருப்தியளிப்பதாகவும் ஜே.வி.பி. தலைமை தெரிவித்துள்ளது.

இதேவேளை இம் மாதம் சனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள மற்றொரு கட்டப் பேச்சுவார்த்தையில் பல முக்கிய விடயங்கள் தொடர்பாக உடன்பாடு எட்டப்படும் எனவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

இரு கட்சிகளும் தேர்தல் உடன்பாட்டை உள்ளடக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புலிகளுடன் பேச்சுவார்த்தை முஸ்லிங்களுக்கு பாதகமாக மாட்டாது!

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுவார்த்தை முஸ்லிங்களுக்கு பாதகமாக அமையமாட்டாது என்று சிறிலங்காவின் அரசியல் யாப்பு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உறுதியளித்துள்ளார்.

சமாதான முயற்சிகளின் பயனாக தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் முஸ்லிங்கள் பெரும் பயனடைவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முஸ்லிங்களின் பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகள் விவாதிக்க முன்வந்துள்ளதாகவும், முஸ்லிம்கள் தமது வயல்களில் பயிர்செய்ய இணக்கம் தெரிவித்தமை குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் எட்டப்படும் எந்தவித உடன்பாடுகளும் முஸ்லிங்களின் கருத்துக் கணிப்பின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே செயற்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கடற்படைக்கு அமெ. வழங்கிய கப்பலை சிறிலங்காவுக்கு கொண்டுவர நடவடிக்கை!

### அமைச்சர் மிலிந்த மொறகொட பணிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவினால் சிறிலங்காவுக்கு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ள கரையோர பாதுகாப்புக் கப்பலை சிறிலங்காவுக்கு கொண்டுவரும் பொருட்டு சிறிலங்கா கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளை அமெரிக்காவுக்கு உடனடியாக அழைக்குமாறு பிரிகேடியர் றொகான் ஜெயசிங்கவுக்கு அமைச்சர் மிலிந்த மொறகொட அறிவுறுத்தல் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(08ஆம் பக்கம் பார்க்க)






தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கணினிப்பயிற்சி நெறியில் பயின்ற மாணவர்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சான்றிதழ்களை வழங்கும் வைபவம். (படம் - லோகீசன்)


## வரிவிளம்பரம்

**2003 A/L LOGIC**

மாதிரி வினாத்தொகுப்புகள் விற்பனையாகின்றன.

- ☐. அறிவு அமுது புத்தகசாலை- கிளிநொச்சி.
- ☐. பூபாலசிங்கம் புத்தகசாலை- யாழ்ப்பாணம்.
- ☐. பிள்ளையார் புத்தகசாலை-கிளிநொச்சி. (சி.8076)

## புதிய வெளியீடு

யாழ். ஆசிரியர் வேலுப்பிள்ளை அன்பழகன் அவர்களது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. பாடம் சார்ந்த உதவிக் குறிப்புக்கள், பயிற்சி வினாக்கள், விடைகள் உள்ளடங்கியது. வன்னியில் சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும் வன்னியில் எமது முகவர்:-பிள்ளையார் புத்தகசாலை, கண்டி வீதி, கிளிநொச்சி, அறிவொளி புத்தகசாலை, புதுக்குடியிருப்பு. (7850)


# த. புனர்வாழ்வுக் கழக கணினிப் பயிற்சி நெறி நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கலும்

(அலுவலக செய்தியாளர்)

கனேடிய தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் கிளிநொச்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கணினிப்பயிற்சி நெறியின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.



காலை 11.00 மணிக்கு ஆரம்பமான மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அவுஸ்திரேலியக் கிளையை சேர்ந்த கௌரி மகேஸ்வரன், வாகீசன், டென்மார்க் கிளையைச் சேர்ந்த மகேஸ்வரன், பிரான்ஸ அரசசார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த ஒரோரா ஆகியோர் ஏற்றி வைத்தனர். தேசியக்கொடியை அரசியல் துறையைச் சேர்ந்த ஜெகன் ஏற்றி வைத்தார்.

வரவேற்புரையை ஆசிரியர் மாருகா நிகழ்த்தினார். சிறப்புரைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ். இனியவன் டென்மார்க் கிளையைச் சேர்ந்த மகேஸ்வரன் ஆகியோர் ஆற்றினர். மாணவர் சார்பில் செல்வன் சந்திரகுமார் உரையாற்றினார். சான்றிதழ்களை தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்று பணிப்பாளர் திரு. இனியவன், ஒரோரா, மகேஸ்வரன் திரு. வாகீசன் அமெரிக்காவைச் சேர்ந்த விமல்ராஜ் கனடா கிளையைச் சேர்ந்த கிரி ஆகியோர் வழங்கினார்கள்.

நன்றியுரையை ஆசிரியர் சிவகுமார் ஆற்றினார். இந்நிகழ்வில் முப்பத்தெட்டுக்கும் (38) மேற்பட்ட மாணவர்கள் மேற்படி கற்கை நெறியை நிறைவுசெய்து சான்றிதழ்களைப் பெற்றனர்.

மேற்படி நிகழ்வுகள் ஆசிரியர் சசிதரன் தலைமையில் இடம்பெற்றது. (லோ)

# நாட்டில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த அனைவரும் தயாரக வேண்டும்

## - திருமலை நிகழ்வில் எழிலன் அறைகூவல்

(திருகோணமலை)

ஒரு சிறு குழுவினாலே பெரும் வெற்றியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமாக இருந்தால் அதற்காக பெரிய தியாகத்தைச் செய்ய வேண்டிய தேவை இருந்தது. அதனாலேயே கரும்புலிகள் உருவாக்கப்பட்டார்கள் என வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார். திருகோணமலையில் நடைபெற்ற இசை, நடன, நாடக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கரும்புலிகளின் வரலாற்றுச் சாவின் காரணமாக பல மாற்றங்களைச் சந்தித்துள்ளோம். அது உங்கள் அனைவருக்கும் தெரியும். இன்று விடுதலைப்புலிகளோடு பேசுகின்ற நிலைமை ஏன் உருவாகியது என்பது அனைவருக்கும் தெரியும். இதற்கான காரணத்திற்கு யார் வழிசமைத்துக் கொடுத்தார்கள் என்பது தெரியும்.

சாவு என்பது இந்த மண்ணின் விடுதலைக்காக ஒரு வெற்றியைத் தேடித்தருமாக இருந்தால் அதற்காக நான் என்னை வெடித்துக் கொள்வதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. போர் என்பது எவ்வளவு மோசமானது என்பது எமக்குத் தெரியும். அதிலுள்ள வேதனையும், துன்பமும் கஷ்டமும் எங்களுக்குத் தெரியும். ஆனால் அவற்றை நாங்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளவில்லை. அது எங்கள் மீது திணிக்கப்பட்ட விடயமாகும்.

புலிகளாக இருந்தாலும் சரி, இராணுவமாக இருந்தாலும் சரி அவரவருக்குரிய சீருடைகளை அவரவர் போட்டுவிட்டார்களென்றால் அந்த சீருடையைத் தாங்கியவர்கள் தங்களுடைய நாடு பாதுகாக்கப்பட வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்களாக இருந்தால் சாவு எப்பொழுதும் வரும் என்ற சிந்தனை அவர்களுக்கு இருந்துகொண்டே இருக்கும். முதலில் போர்நிறுத்தம் செய்துவிட்டு வாருங்கள் பேசுவோம் என கேட்டது விடுதலைப்புலிகளே. ஆனால் இந்த அமைதிச் சூழலிலும் புலிகள் கைது செய்யப்படுகிறார்கள். வீரச்சாவைத் தழுவிக்கொள்ள நேரிடுகிறது. அமைதி கெட்டுப்போகக் கூடாது என்பதற்காக நாங்கள் பல போராளிகளை இழந்திருக்கின்றோம். சண்டையாக இருந்தாலும் சரி, சமாதானமாக இருந்தாலும் சரி இந்த மக்களுக்காக எது நல்லது நடக்க வேண்டுமோ அதற்காக எந்த நேரத்திலும் சாவதற்குத் தயாராக இருக்கின்ற போராளிகள் தான் விடுதலைப்புலிகள்.

இன்று புலிகள் கேட்டுக்கொள்வது ஒன்றே ஒன்றுதான். இந்த சூழலைக் குழப்பாமல் ஒரு நல்லமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்பதே அத்தோடு ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எல்லோரும் தயாராகுவோம் என அறைகூவல் விடுத்தார்.

# உரியவர்கள் நீதிமன்றில் பெற்றுக்கொள்ளலாம்

பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தேசிய அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள், பணம் என்பன கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதி மன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கறுப்புநிற பை ஒன்றினுள் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெரிய கறுப்பன் ராயப்பன் (403460192v) இரத்தினம் வீரராணி (657262277V) கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த செல்லையா பவளவள்ளி (575613328v) இவற்றுடன் 124 ரூபா பணம் உள்ளது.

2. காங்கேசன்துறை வீதிஇணுவிலைச் சேர்ந்த கலைவாணி குணரத்தினம் (775954779 v) இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, தற்காலிக பயண அனுமதியட்டை, ரூபா 450 பணம் என்பன அடங்கிய கறுப்புநிற பை ஒன்று.

3. செல்லத்துரை மகேந்திரன் (027250) அலுவலக அடையாள அட்டை இராணுவத்தினரால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, சிறு தொகைப் பணம்.

4. கல்மடுவைச் சேர்ந்த சின்னத்துரை மோகனதாஸ் (731054100v) என்பவரது தேசிய அடையாள அட்டை.

5. கிளி. ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த தங்கேஸ்வரன் உதயராணி (767614047v) என்பவரது தேசிய அடையாள அட்டை, வங்கி சேமிப்பு புத்தகம்.

6. நிறைவேற்றுனர் காரியாலயம் அம்பாறையைச் சேர்ந்த குணரத்தினம் ராகு (550151863v) என்பரது தேசிய அடையாள அட்டை செஞ்சிலுவைச் சங்க அங்கத்துவ அட்டை, லயனஸ் கிளப் அங்கத்துவ அட்டை, இராணுவத்தினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை.

7. சிறிய பேஸ் ஒன்றினுள் 1250 ரூபா பணம்.

மேற்படி பொருட்கள் யாவும் கிளி மாவட்ட தமிழீழ நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் நீதிமன்ற அலுவலக நேரங்களில் ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட நீதிமன்றின் பதிவாளர் தெரிவித்துள்ளார். (பா)

# திலீபன் மருத்துவ சேவையினரால் 13597 பேருக்குச் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ சுகாதார சேவையின் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த மாதம் அடம்பன், ஆழியவளை, நெடுந்தீவு, நைனாமடு, ஐயன்கன்குளம், கற்சிலைமடு, மாங்குளம், பூநகரி, அளம்பில் ஆகிய ஒன்பது மருத்துவ சேவை நிலையங்களிலும் பதின்மூவாயித்து ஐந்நூற்று தொண்ணூற்று ஏழு (13597) நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் சுவாசத்தொற்று காரணமாகவே அதிகளவான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். வைரஸ் காய்ச்சல் காரணமாக 1478 நோயாளர்களும் சுவாசத்தொற்றுநோய் காரணமாக 2000 பேரும், மலேரியா காய்ச்சல் காரணமாக 628 நோயாளர்களும், தோல் நோய்கள் காரணமாக 772 நோயாளர்களும், குடற்புழுத் தொற்றுநோய காரணமாக 1154 நோயாளர்களும், வயிற்றோட்ட நோய் காரணமாக 260 நோயாளர்களும், காயங்கள் காரணமாக 1401 பேரும், நாய்க்கடி காரணமாக 129 பேரும், பாம்புக்கடி காரணமாக 23 பேரும், நெருப்புக் காய்ச்சல் காரணமாக 07 பேரும், குருதிச் சோகை காரணமாக 245 பேரும் ஒவ்வாமை காரணமாக 308 பேரும், சிகிச்சை பெற்றுள்ளனர்.

அத்துடன் மேற்படி மருத்துவ நிலையங்களை அண்டிய கிராமங்களில் சுகாதார விழிப்புணர்வு செயற்பாடுகளான சுகாதாரக்கல்வியூட்டல் மேற்கொள்ளப்பட்டதுடன் பொதுக் கிணறுகள் அதிகரித்த பாவனை கொண்ட கிணறுகள் போன்றவற்றுக்கு குளோரின் இடப்பட்டு சுத்தம் செய்யப் பட்டுள்ளது.

மேலும் தியாக தீபம் திலீபன் மருத்துவசேவையினரால் நோயாளரின் நன்மை கருதி நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்பட்டு வருகிறது. மேற்படி நடமாடும் மருத்துவ சேவையில் கடந்தமாதம் 3910 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 14 - 11 - 1986



மறைவு 18 - 03 - 2003

**ஞானரெட்ணம் சுரேஸ் பெர்னாண்டோ**

உன் ஆசை முகம் கண்டு
31நாள் ஆகியும் என்றும்
மறவாத உன் நினைவு வோடு
மனதை விட்டு மறையாது மகனே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
தினமும் பிரார்த்திக்கின்றோம்.

உன்நினைவால் ஏங்கித் தவிக்கும்
அன்பு உள்ளங்கள

**அப்பா, அம்மா, சகோதரர்கள், மைத்துனர்.**

தகவல்
முரளி,
573/7ஆம் யூனிற்,
இராமநாதபுரம்.

(3089)

# இந்தியா – பாகிஸ்தான் பிரச்சினைகள் பேச்சுக்கள் மூலம் தீர்ப்பது கடினம்!

## - அமெரிக்காவின் நிலைப்பாடு இதுவென்கிறார் கொலின் பவல்

**இந்தியா - பாகிஸ்தான் இடையேயுள்ள பிரச்சினைகள் பேச்சு வார்த்தைகள் மூலமாகத் தீர்த்துக் கொள்வது மிகவும் சிரமமானது என அமெரிக்கா உறுதிபடத் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இக்கருத்து வாஷிங்டனில் வெளியிடப்பட்டுள்ளது.**

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் வாஷிங்டனில் நேற்று முன் தினம் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையில் இவ்வாறான கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த இரு நாடுகளிடையிலான பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்வது என்பது மிகவும் கடினமானது என அவர் அப்போது வலியுறுத்தி கூறினார்.

எனினும், பேச்சுக்கள் நடத்தப்படுவதன் அவசியம் குறித்து அவர் வலியுறுத்தத் தவறவில்லை. இந்தியா - பாகிஸ்தான் இடையேயுள்ள பிரச்சினைகளைக் குறைக்க இரு நாட்டு அரசுகளும் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்வதாக கூறியதோடு பாகிஸ்தானின் போக்கிற்கு கண்டனத்தையும் தெரிவித்துக் கொண்டார். எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை மீறி இந்தியாவுக்குள் நடத்தப்படும் வன்முறைச் சம்பவங்களை அமெரிக்கா தொடர்ந்து கண்டித்து வருவதாக மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக் பிரச்சினைக்கு முடிவு காணப்பட்ட பின்னர் அமெரிக்கா காஷ்மீர் விவகாரத்தை எடுத்துக் கொள்ளும் என்று வெளியிடப்பட்ட கருத்துக்களால் சினமடைந்த இந்தியா இக்கருத்துக்களுக்கு எதிராக கடுமையான கண்டனங்களை வெளியிட்டு வருகின்றமை தெரிந்ததே.

## அபு அபாஸ் கைது!

பலஸ்தீன கெரில்லா தலைவரும் கடந்த 18 வருட காலமாக இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகளால் தேடப்பட்டு வருபவருமான அபு அபாஸ் பாக்தாத்தில் அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது கைதை அடுத்து மத்திய கிழக்கு பகுதியில் பதட்டம் அதிகரித்துள்ளது.



பாங்கொக் விமான நிலையத்தில் 'சார்ஸ்' பாதுகாப்பு நடைமுறைகளுடன் பயணிகள்

## ஆயுத ஆய்வறிக்கையை வெளியிட வலியுறுத்து

ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆயுத ஆய்வுகள் தொடர்பான அறிக்கைகளை வெளியிடுமாறு தலைமை ஆயுதக் கண்காணிப்பாளர் கான்ஸ் பீலிக்ஸை ஐ.நா. பாதுகாப்பு சபை கேட்டுள்ளது.

அத்தோடு, ஆயுத கண்காணிப்பாளர் குழுவினர் மீண்டும் ஈராக் செல்ல வேண்டும் என்ற வற்புறுத்தல்களும் விடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், பாதுகாப்பு சபையின் பல உறுப்பினர்கள் முன்னைய ஆய்வறிக்கையை வெளியிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஈராக்கில் புதிய அரசு அமைக்கும் கூட்டம் முடிவுகள் எட்டப்படா நிலையில் முடிவு!

ஈராக்கில் புதிய அரசு அமைப்பதற்கான கூட்டம் எவ்வித முடிவுக்கும் எட்டப்படாத நிலையில் முடிவு பெற்றுள்ளது.

ஈராக்கில் புதிய அரசு அமைப்பது பற்றி ஆலோசிக்க அந்நாட்டின் எதிர்க்கட்சிகள், பல்வேறு அமைப்புக்கள் ஈராக்கின் தென்பகுதியில் உள்ள நஸ்ரியாவில் நேற்று முன்தினம் கூடின. ஈராக்கில் ஆட்சி அமைக்க அமெரிக்கா முன் நிறுத்துவதாகக் கூறப்படும் அகமது சலாபிக்குப் பதிலாக, அவரது கட்சியின் பிரதிநிதி கலந்து கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜேகார்ட்னட் கூட்டத்தை தொடக்கி வைத்தார்.

ஈராக்கின் ஷியா பிரிவு முஸ்லிம்களைப் பெருமளவில் கொண்டிருக்கும் இஸ்லாமியப் புரட்சிகரக்கவுன்சில் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்துள்ளது. இந்நிலையில் எந்தவொரு முடிவும் எட்டப்படாத நிலையில் மீண்டும் 10 நாட்களுக்குள் கூடிப் பேசுவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.



ஈராக்கிய படைவீரர் ஒருவரை சோதனையிடும் அமெரிக்க படையினர்

## பேரழிவு ஆயுதங்களை அழிப்பதாக அமெரிக்கா இரட்டை வேடம் போடுகிறது

### -வாஷிங்டனிலுள்ள சிரிய தூதுவர் சாடல்

பேரழிவு ஆயுதங்களை அழிப்பதாகக் கூறி அமெரிக்கா இரட்டை வேடம் போடுகிறது -என அமெரிக்காவுக்கான சிரியா தூதுவர் டாக்டர் றெட் சூட் அல் சோபி தெரிவித்துள்ளார்.

மேலும், சதாம் மற்றும் அவரது குடும்பத்தவர்கள் உட்பட முக்கிய தலைவர்களுக்கு சிரியா அடைக்கலம் கொடுத்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்களை அவர் முற்றாக நிராகரித்துள்ளார்.

சிரியா மீது அமெரிக்கா கூறி வரும் குற்றச்சாட்டு துரதிஸ்டவசமானது. ஈராக்கைத் தற்போது தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அமெரிக்கா அங்கிருந்து வெளியேறுபவர்களைக் கண்காணிப்பதை விட்டுவிட்டு,எங்கள் நாட்டின் மீது குறை கூறுவது அர்த்தமற்றது.

மேலும் எங்கள் நாட்டில் பேரழிவு ஆயுதங்கள் வைத்திருப்பது தொடர்பான விடயத்தில் அமெரிக்காவிடம் எந்தவொரு ஆதாரமும் இல்லை என்றும் அல்சோபி குறிப்பிட்டுள்ளார்.

## சிராக் -புஷ் உரையாடல்!

பிரான்ஸ் சனாதிபதி ஜக்ஸ் சிராக்கும் அமெரிக்க சனாதிபதி ஜோர்ச் புஷ்சும் நேற்று முன் தினம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடினார்.

ஈராக் மீதான தாக்குதலை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்தவர்களில் பிரான்ஸ் சனாதிபதி ஜக்ஸ் சிராக்கும் முக்கியமானவர் எனபது தெரிந்ததே.

அதனால், இரண்டு மாத காலத்திற்குப் பின்னர் மீண்டும் இருவரும் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டுள்ளது. இதுவே முதல் தடவை ஆகும்.

## வடகொரியா –அமெரிக்கா பிரதிநிதிகள் நேரடிப் பேச்சு!

வடகொரிய இராணுவ விவகாரங்களுக்குத் தீர்வு காணும் வகையில் அமெரிக்க- வடகொரிய பிரதிநிதிகள் அடுத்த வாரம் நேரடிப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளனர்.

இந்தப் பிரச்சினைக்கு ஜப்பான், தென்கொரியா உட்பட ஐந்து நாடுகள் கொண்ட குழு மூலம் சமரசம் காண முடியும் என வடகொரியா தெரிவித்திருந்த போதிலும் பிரச்சினைக்குத் தீர்வுகாண நேரடிப் பேச்சுவார்த்தைகளையே மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ந்து வற்புறுத்தி வந்தது.

'நியூயோர்க் டைம்ஸ்' வெளியிட்ட தகவலில் சீன தலைநகரில் இப்பேச்சுக்கள் இடம்பெறும் எனத் தெரிவித்துள்ளது.

## தமிழக அரசின் நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சிகள் ஒன்றுகூடி ஆராய்வு

(சென்னை)

அ.தி.மு.கழக அரசிற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றை இம்மாதம் 23ஆம் திகதி தி.மு. கழகம் கூட்டவுள்ளது.

அரசியல் சாசனத்தின் 356ஆவது பிரிவைப்பயன்படுத்தி ஜெயலலிதா அரசை நீக்குவது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசிலிருந்து தி.மு.க. வெளியேறுமா? என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் இது குறித்து முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லையெனக் கூறியுள்ளார்.

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் செய்தியாளர்களிடம் பேசுகையில்;

மாநிலத்தின் அனைத்து பிரிவினர்களின் அதிருப்தியை பெற்றுள்ள அ.தி.மு.க. அரசு தொடர்ந்து பதவியில் நீடிக்கக் கூடாது எனக் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சிகளுக்கு எதிராக சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்ட அ.தி.மு.க. அரசு மீது அரசியல் சாசனத்தின் 356ஆவது பிரிவைப் பயன்படுத்துவதில் தவறில்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

## இந்தியா தாக்குமானால் விளைவுகள் மோசமாகும்!

### - பாகிஸ்தான் எச்சரிக்கை

இந்தியா தங்கள் நாட்டின் மீது தாக்குதல் நடத்த முயன்றால், மிகக் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் முகம்மது ஹசூரி கூறியுள்ளார். இந்தியாவை விட அதிக சக்தி வாய்ந்த ஏவுகணைகள் தங்களிடம் இருப்பதாகவும், தங்கள் நாட்டின் மீது இந்தியா தவறான முறையில் தாக்குதல் நடத்த முயன்றால், தோற்றுப் போவது இந்தியாவாகவே இருக்கும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.



பாக்தாத்தில் மருத்துவமனையொன்றில் சிகிச்சைபெறும் காயமடைந்த சிறுவர்கள்.

# 'பொடோ' ஸ்ராலின் மீதும் பாயுமா?

அ.கலைவாணி



தமிழகத்தின் அரசியல் சதுரங்கத்தில், கைது செய்யப்படுவது என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. எங்கோ.. எப்படியோ... ஏதோ ஒரு மூலையில் யாராவது கைது செய்யப்படுவதும்; பின்னர் அவர்கள் வெளியே வரமுடியாதபடி பொடோ சட்டம் கொண்டு கட்டி வைப்பதும்தான் தற்போதைய வழமையான சம்பவங்களாகிவிட்டன.

அந்த வகையில், தற்போது அதிரடியாக கைது செய்யப்பட்டிருப்பவர்கள் மு.க. ஸ்டாலின், பொன்முடி, உ.சேன், அன்பழகன், வேலு, பரணிகுமார் ஆகிய திராவிட முன்னேற்றக்கழக சட்டமன்ற உறுப்பினர்கள்.

அத்துடன், ராணிமேரி கல்லூரி மாணவிகளின் போராட்டத்திற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி தான் தூண்டுதல் என்றும், அதனால் அவரும் விரைவில் கைதாகலாம் எனும் ஊகங்களும் கசிந்து கொண்டிருக்கின்றன.

தற்போதுள்ள தமிழகத் தலைமைச் செயலகக் கட்டட வளாகத்தில் உலங்குவானூர்தி இறங்குதளம் போன்ற வசதிகள் இல்லாமையினால், ராணிமேரி கல்லூரியை இடித்து அதில் நவீன வசதிகளுடன் தலைமைச் செயலகம் அமைக்கப்போவதாகவும் தமிழக முதலமைச்சர் தனது எண்ணக் கருவை வெளியிட்டிருந்தார்.

இதனால், கோபமடைந்த ராணிமேரி கல்லூரி மாணவிகள் "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கென" தமிழக அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் குதித்திருந்தனர்.

இம்மாணவிகளின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கினார் தி.மு.க. தலைவர் கருணாநிதி. இதனை மாணவிகளிடம் எடுத்துச் சென்றவர் மு.க. ஸ்டாலின்.

மு.க.ஸ்டாலின் குழுவினரை கல்லூரி வளாகத்தினுள் காவல்துறையினர் அனுமதிக்கவில்லை என்பதுடன், அவர்களை உட்செல்லவிடாது தடையும் விதித்தனர்.

தடைகளை தூசியென தட்டிவிட்டு உள்ளே சென்ற ஸ்டாலின் குழுவினர் மாணவிகளுக்கு தமது ஆதரவுக் கரங்களை நீட்டத் தயாராக இருப்பதாகக் கூறிவந்தனர்.

இதனால், தடையை மீறி உட்சென்று படித்துக் கொண்டிருந்த மாணவிகளை ஒன்றுதிரட்டி போராட்டத்தை நடத்துமாறு ஒத்தூதியதாக, கடந்த ஏப்ரல் 09 ஆம் திகதி ஸ்டாலின் இரவோடு இரவாக கடலூர் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார்.

முன்பும் 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பீடமேறியதும் ஜெயலலிதா தி.மு.க. தலைவரும், முன்னாள் முதமைச்சருமான கருணாநிதியையும் இவ்வாறுதான் இரவோடு இரவாக சிறைக்குள் தள்ளினாராம். அது போன்றே தற்போது மகனையும் சிறைக்குள் தள்ளிவிட்டுள்ளார் என தி.மு.க. தொண்டர்கள் முணுமுணுக்கின்றார்கள்.



ராணிமேரி கல்லூரியோ 30 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதுடன் 1914 ஆம் ஆண்டு சென்னை பெண்கள் கல்லூரி என ஆரம்பிக்கப்பட்டு, 1917 ஆம் ஆண்டு ராணி மேரி கல்லூரி என பெயர் மாற்றப்பட்டு இயங்கி வருகின்றது. இக்கல்லூரியில் 5000 மாணவிகள் கல்வி கற்று வருகின்றனர்.

இக்கல்லூரி சொத்து, சென்னை பல்கலைக்கழகத்தின் பெயரில் உள்ளதால் இதனை இடிப்பதானால் சென்னை பல்கலைக்கழக செனட் சபைகூடி ஒப்புதல் அளிக்க வேண்டும்.

ஆனால், யாரிடமும் அனுமதி பெறாத தமிழக முதலமைச்சர் "கொக்குக்கு ஒன்றே மதி" என்பது போல, ராணிமேரி கல்லூரி இடிக்கப்பட்டு, புதிய தலைமைச் செயலகம் கட்டுவதிலேயே குறியாக உள்ளார்.

ஏன்... மாணவிகளின் கல்வியில் கைவைத்து அங்கு தலைமைச் செயலகம் அமைப்பதில் தமிழக முதலமைச்சர் முனைப்பாக உள்ளார் என்றால், முன்னர் மாமல்லபுரத்தில் தான் தலைமைச் செயலகம் கட்டுவதாக இருந்தது. பின்னர் கடற்கரை ஓரமாகவுள்ள ராணிமேரி கல்லூரி தேர்ந்தெடுக்கப்பட்டது. ஏன் இந்த இடமாற்றம்.....?

மக்கள் நெருக்கடி நிறைந்த சென்னை நகரை விட்டுவிட்டு, புறநகர்ப் பகுதி கல்லூரி வளாகத்தை முதல்வர் ஏன் தேர்வு செய்தார்... ?

வாஸ்து சாஸ்திரம் அண்மைக் காலமாக, தமிழக மக்களைத்தான் ஆட்டிப்படைக்கின்றது என்றால், தமிழக முதலமைச்சரையும் அது விட்டுவைக்கவில்லை எனலாம்.

ஏன் எனில், "கோட்டை உங்களுக்கு ராசியில்லை. அதனால் ராணிமேரி கல்லூரி வளாகத்தில் புதிய தலைமைச் செயலகம் கட்டி அங்கு ஆட்சி தொடருவீர்களானால், உங்கள் யோகம் சிறக்கும்" என ஜோதிடன் கூறினாலும் கூறினான். முதலமைச்சரோ உடை கல்லூரியை... அத்திவாரமிடு தலைமைச் செயலகத்திற்கு.. என்று தொடங்கிவிட்டார்.

முன்பும் இப்படித்தான் "சென்னை மெரீனா கடற்கரையில் கண்ணகி சிலை இருப்பது, உங்களிற்கு ஆகாது" என ஜோதிடன் திருவாய் மலர்ந்தருளிவிட, இரவோடு இரவாக கண்ணகி சிலை காணாமல்போய்விட்டது.

மக்கள்தான் மூடநம்பிக்கைகளில் திளைக்கின்றார்கள் என்றால், தமிழக முதலமைச்சரும் அதில் திளைக்கலாமா... அதன்படி நடைமுறைப்படுத்தலாமா... இது எங்கே கொண்டேவிட்டுப் போகின்றது... மூட நம்பிக்கைகளுக்கு குறுக்கே வருபவர்கள் அனைவரும் சிறைவாசம்தான் அனுபவிப்பார்களா... என அவதானிகளிடையே கருத்து நிலவுகின்றது.

இதனிடையே தி.மு.க.வுக்கும், முதலமைச்சருக்கும் இடையே காலம் காலமாய் எட்டாப் பொருத்தம்தான் நிலவி வருகின்றது என்பது தெரிந்தவிடயமே. சட்டப் பேரவையில் சுழிக்கும் செக்கன் ஒவ்வொன்றும் இரு தரப்பும் வசைமாரி பொழிவதில் அவரவருக்கு நிகர் அவர்களே தான்.

தி.மு.க.வினர் சட்டப் பேரவையில் ஒருபோதும் மக்கள் பிரச்சினைகளை கதைப்பதுமில்லை சட்டப் பேரவைக்கு வருவதுமில்லை என முதலமைச்சர் அடிக்கடி கூறிக் கொள்வார்.

இந்த வகையில், ஸ்டாலின் சென்னை மாநகர மேயராக இருக்கையில், பெண்கள் திருமண உதவித் திட்டம், உழவர் சந்தை, சமத்துவபுரம், இலவச வேட்டி சேலைத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியதாக நிதிநிலை அறிக்கை வாசிக்கப்பட்டபோது, எவற்றுக்குமே நிதி வழங்கப்படாமையை புள்ளி விபரங்களோடு குற்றப் பத்திரிகை வாசித்தவர்.

இதனால், ஸ்டாலின் விதண்டாவாதம் பேசுவதாகக் கூறிய முதலமைச்சர், ஸ்டாலினுக்கு என்றே புதிய சட்டம் இயற்றி, அவரை சென்னை மாநகர மேஜர் பதவியிலிருந்து தூக்கி வீசிவிட்டார்.

வீசப்பட்ட ஸ்டாலினோ, சும்மா இருப்பதில்லை. ஏதாவது ஒரு பிரச்சினையை, சட்ட சபையில் கேள்வியாக எழுப்புவார்.. இல்லையேல், போர்க் கொடி தூக்கி போராட்டத்தில் இறங்கி விடுவார்.

அதே போன்று தான் பொன்முடியும். சந்திரபாபு நாயுடுவை எதற்காகச் சந்தித்தீர்கள்....? சட்ட சபைக்கு வராமல் கலைஞர் தொகுதி மக்களுக்கு துரோகம் செய்கின்றார் என்றால், 1989, 1990 இரண்டு ஆண்டுகளும் நீங்கள் சட்ட மன்றத்துக்கு ஏன் வராமல் இருந்தீர்கள் காரணம் கூற முடியுமா...? என்று முதலமைச்சரை சட்டப்பேரவையில் கேள்விகளால் துளைத்துக் கொண்டே இருப்பார்.

"ஓடு மீன் ஓடி உறு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்பது போல எங்கே ஸ்டாலின், பொன்முடியை சிக்க வைக்கலாம் என காத்திருந்த முதலமைச்சருக்கு, ராணிமேரி கல்லூரிதான் கைகொடுத்துள்ளது என்கிறது அரசியல் வட்டாரம்.

ஏன் எனில், ராணிமேரி கல்லூரியை பழையபடி திறக்க கோட் உத்தரவிட்டுள்ளதுடன், அடாவடியில் இறங்கும் கல்லூரி மாணவிகள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் கோட் எச்சரித்துள்ளது.

தற்போது கல்லூரி மாணவிகளின் இயல்பு நிலை திரும்பியுள்ளது. ஆனால் அவர்களுக்கு கை கொடுக்கப் போன ஸ்டாலின் குழுவோ சிறைக் கம்பிகளுக்குப் பின்னே காலம் கழிக்கின்றது.


எதிர்வரும் 23 ஆம் திகதி வரை கடலூர் சிறையில் இருக்க வேண்டும் இவர்கள். அதன் பின்னரே விசாரணைகள் தொடரவுள்ளன.

ஸ்டாலின் காவல்துறையினருடன் ஒத்துழைக்காமை, அடிதடி கும்பலை ஏவி காவல் துறையினரை தாக்கியமை, தி.மு.க. தொண்டர் குழு வீதி மறியல், போராட்டம் கல்லெறி பஸ் எரிப்பு என்பன ஸ்டாலின் குழு மீதும், ஆதரவாளர்கள் மீதும் தற்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஏராளம்.

அத்துடன், தி.மு.வினர் தான், பொடோ சட்டத்தை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டத்தை வலுவூட்டியவர்கள்.

அதனால்தான், துணைப்பிரதமர் அத்வானி பொடோ சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதாக தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு நம்பிக்கை அளித்துள்ளார்.

எனவே தனக்கு எதிரானவர்களை பொடோ சட்டத்திற்குள் தள்ளி வந்த முதலமைச்சருக்கு இப் பொடோ சட்டத் திருத்தம் புதுவித தலைவலியே. இதற்குக் காரணமானவர்கள் தி.க.வினரே, எனவே தி.மு.க. மீது முதலமைச்சரின் கோபம் நியாயமானதே என்பது ஒருசாரார் கருத்து.



என்றாலும் முதலமைச்சர் எப்போதும் முன்வைத்த காலைப் பின் வைக்காதவர் என்று கூறப்படுவதால், தற்போது ராணி



மேரி கல்லூரி விடயத்தில் கொஞ்சம் தளர்வை ஏற்படுத்தியுள்ளாரே தவிர அத்திட்டத்தைக் கைவிட்டுவிடவில்லை. திரும்பவும் ஏதோ ஒரு புதிய விளக்கத்துடன் ராணிமேரி கல்லூரி தலைமைச் செயலகம் ஆகலாம் அல்லது, ஜோதிடர்கள் புதிய ஒரு யோசனையாக இன்னொரு கல்லூரியை நோக்கி கை நீட்டும் போது, ராணிமேரி கல்லூரி தப்பித்துக் கொள்ளலாம்....

எனவே இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டுமாயின், முதலமைச்சருக்கு பெரு உதவியாக இருப்பது பொடோ சட்டம் தான். தமிழகத்தில் பொடோ தவறாகப் பயன்படுத்தப்படவில்லை, பயன்படுத்துவதும் இல்லை என்று கூறும் முதலமைச்சர் தனக்கு எதிரானவர்கள் மீது பொடோ சட்டத்தை தான் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

தற்போது ஸ்டாலின் எதிர் கால முதல்வர் என்று பரவலாகக் கூறப்படுவதால், அது முதலமைச்சருக்கு இனிப்பான விடயமல்லவே.

எனவே ஸ்டாலினை தற்போது சுற்றியுள்ள குற்றச்சாட்டுக்கள் விலகுமா..... என்பதுடன், எதிர்வரும் 23 ஆம் திகதி அவர் வெளிவருவாரா அல்லது சிறைக்குப் பின்னேதான் நிரந்தரமா.... என்பன எதிர் காலத்தில் பதில் தேட வேண்டிய வினாக்கள்.

அத்துடன், தமிழக முதலமைச்சர் ஜோதிடர் பிடியிலிருந்து விடுபடுவாரா..... அல்லது தமிழக மக்களில் சில ஜோதிடர் பிடியில் சிக்கி சின்னாபின்னமாவது போல தமிழக முதலமைச்சரும் சிக்கிவிட்டால் தமிழகத்தின் எதிர்கால நிலைதான் என்ன....?



# அமெரிக்காவின் இலக்கு ஈராக் மட்டும் தானா!

ஈராக் மீது அமெரிக்கா மேற்கொண்ட யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனின் சொந்த ஊரான திட்ரிக் அமெரிக்கப் படைகளால் கைப்பற்றப்பட்டதும் போர் முடிவுக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. மூன்று வாரங்கள் இடம்பெற்ற இப்போரில் ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அவர் உயிருடன் உள்ளாரா? அன்றி இறந்துபோய் விட்டாரா? என்ற நிலையில் அமெரிக்கப் படைகளின் தேடுதல் வேட்டை தொடர்கின்றது.

ஈராக்மீது தாக்குதல் நடத்துவதற்கென அமெரிக்கா கூறிக்கொண்ட காரணங்கள் பலவாகும். இதில் சில காலத்திற்குக் காலம் மாற்றம் கண்டும் வந்துள்ளன.

ஆனால், பொதுவில் ஈராக்மீதான தாக்குதலுக்கு ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனைப் பதவியில் இருந்து அகற்றுதல், ஈராக்கில் உள்ள பேரழிவு ஆயுதங்களை அகற்றுதல், சர்வதேச பயங்கரவாதத்திற்கு ஆதரவுதரும் அரசைத் தண்டித்தல் போன்ற காரணங்கள் அமெரிக்கத்தரப்பால் கூறப்பட்டது.

இதேவேளை, உலகின் இரண்டாவது பெரிய பெற்றோலிய வளத்தைக் கொண்ட ஈராக்கை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் மேற்கு ஆசியாவில் அமெரிக்க எதிர்ப்பு அரசை அகற்றுதல், சதாம் மீது புஷ் குடும்பத்தினருக்கு இருந்த தனிப்பட்ட பழியைத் தீர்த்துக் கொள்ளுதல் போன்றவை அமெரிக்கத் தாக்குதலுக்குக் காரணமென யுத்தத்திற்கு எதிரானவர்களும் அமெரிக்காவின் போக்கிற்கு எதிரானவர்களும் கூறிக்கொண்ட காரணங்களாகும்.

இந்நிலையில், மூன்று வாரம் நடந்த யுத்தத்தில் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் வெற்றி பெற்றுள்ளன. எதிர்பார்த்த அளவில் யுத்தம் கடுமையானதாகவோ, தீவிரமானதாகவோ இருக்கவில்லை என்பதே பெரும்பாலான நோக்கர்களின் அபிப்பிராயமாகும். ஆரம்பத்தில் ஈராக்கிய இராணுவம் சிறிதளவு எதிர்ப்பைக் காட்டமுனைந்தது போன்று இருந்தாலும், இறுதியில் ஒழுங்கமான சண்டைகள் இன்றி யுத்தம் முடிந்துள்ளது என்றே அவதானிகள் கூறுகின்றனர்.

இவ்வாறு யுத்தம் முடிவுற்றமைக்குக் காரணம் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகளின் சரமாரியான விமான, ஏவுகணைத் தாக்குதல்கள் ஈராக்கிய இராணுவத்தின் அடிப்படைக் கட்டுமானங்களை அழித்தொழித்து விட்டமை காரணமாக இருக்கலாம். இதேவேளை அமெரிக்கப் படைகளை எதிர்கொள்ள ஈராக்கிய இராணுவம் வகுத்த யுத்தமும் தந்திரோபாயமும் வெற்றி அளிக்காது போயிருக்கலாம்.

எமது அவதானிப்பின்படி ஈராக்கிய இராணுவம்கொரில்லாப் பாணியிலான நடவடிக்கைகள், தற்கொலைத் தாக்குதல்கள் போன்றவற்றிற்குத் திட்டமிட்டிருப்பினும் அதில் அவர்களுக்குப் போதிய பயிற்சியும், அனுபவமும் இல்லாமை காரணமாக இருந்திருக்கலாம் ஏனெனில் ஒரு மரபு வழி இராணுவம் கெரில்லா நடவடிக்கையில் ஈடுபடுதல் என்பது இலகுவானதொருவிடயமல்ல. அத்தோடு ஈராக்கியப் படைகள் எத்தனை தூரம் சதாமிற்கு விசுவாசமாக இருந்தன என்பதும் கேள்விக்குரியவையே.

ஆனால், எது எப்படியோ ஈராக்மீதான தாக்குதலில் அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் வெற்றி பெற்றுள்ளன. சதாம் நாட்டைவிட்டு ஓடி விட்டாரா? அல்லது

## சிரியா மீதான கெடுபிடியில் எழும் கேள்வி

ஈராக்கிற்குள்ளேயே தலைமறைவாக உள்ளாரா? அன்றி கொல்லப்பட்டு விட்டாரா? என்பதை அமெரிக்க பிரிட்டிஷ் தரப்பினால் இன்னமும் தெளிவாக உறுதி செய்யமுடியாத நிலையே காணப்படுகின்றது. ஆகையினால், மேற் கூறப்பட்டமூன்று விடயங்கள் குறித்தும் தகவல் திரட்டுவதில் அமெரிக்க புலனாய்வுத்துறையினரும் இராணுவமும் தற்பொழுது தீவிரமாக இறங்கியுள்ளன.

இது இவ்வாறிருக்க ஈராக்மீதான அமெரிக்கத்தாக்குதலின் நோக்கங்களில் எவை நிறைவு செய்யப்பட்டுள்ளன, எவை நிறைவு செய்யப்படவில்லை என்பது குறித்த மதிப்பீடுகளும் தற்போது செய்யப்படத் தொடங்கிவிட்டன. இதில், அமெரிக்காவிற்கு எதிரான தரப்பினர் கூறிக்கொண்டது போன்று ஈராக்கின் தலைமையை மாற்றுதல், ஈராக்கிய எண்ணெய் வளங்களைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதல் என்பனவற்றில் அமெரிக்கப் படைகள் வெற்றி பெற்றுள்ளன.

இதில் சதாம் ஹுசைனைக் கொல்லுதல் என்பதில் அமெரிக்கப் படைகள் வெற்றி பெற்றனவா? இல்லையா? என்பதை தற்பொழுது உறுதி செய்ய முடியாது போனாலும் சதாம் ஹுசைனை ஆட்சியிலிருந்து துரத்துதல் என்பதில் வெற்றி பெற்றுள்ளனர் என்றே கூறமுடியும்.

இதேவேளை, சதாம் ஹுசைனைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கு அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான பேரழிவு ஆயுதங்களை சதாம் ஹுசைன் உற்பத்தி செய்து வைத்துள்ளார் என்பதை அமெரிக்கத் தரப்பால் இன்னமும் நிருபிக்க முடியாதே உள்ளது.

அதாவது, ஈராக் யுத்தம் நடந்த மூன்று வாரகாலப்பகுதியில் ஈராக்படையினர் அமெரிக்கப்படைகள் மீது இரசாயன ஆயுதங்கள் எதையும் பயன்படுத்தவில்லை என்பது மட்டுமல்ல ஈராக்கில் இதுவரையில் பேரழிவைத் தரக்கூடிய இரசாயன ஆயுதங்களையோ அன்றி அணுவாயுதங்களையோ அமெரிக்க-பிரிட்டிஷ் படைகளினால் கண்டறிய முடியவில்லை.



இந் நிலையில் அமெரிக்காவின் தற்போதைய அறிவிப்புக்கள், அதன் நோக்கமானது ஈராக்மீதான தாக்குதலுக்கான முன் அறிவிப்புக்களுக்கும் அப்பாற்பட்டதாக உள்ளதையே வெளிப்படுத்தியதாகவுள்ளது. குறிப்பாக சிரியா மீது தற்பொழுது அமெரிக்க சுமத்தும் குற்றச்சாட்டுகள் ஈராக் மீதான தாக்குதலுக்கு முன்னதாகவே அதன் தாக்குதல் திட்டம் ஈராக்கின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டதான நோக்கத்தைக் கொண்டிருந்ததை உணர்த்துவதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

இதனைச் சுருக்கமாக கூறுவதானால் மேற்காசியாவின் அரசியல் வரைபடத்தை மாற்றியமைக்க அமெரிக்கா முற்படுவதோடு, மேற்கு ஆசியாவின் இராணுவச் சமநிலையை மாற்றியமைக்கும் நோக்கத்தையும் அது கொண்டிருப்பதாகவே கருத வைக்கின்றது. இந்நிலையில், ஈராக் மீதான தாக்குதலானது மேற்காசியாவில் அமெரிக்காவின் முதலாம் கட்ட நடவடிக்கையாகவே இன்று கொள்ளப்படுகின்றது.

ஈராக் மீதான தாக்குதல் தொடங்கப்பட்டதுமே இதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கிவிட்டன. இதன் முதல் கட்டமாக ஈராக் இராணுவத்திற்கு சிரியா உதவுவதாக அமெரிக்காவினால் குற்றம் சாட்டப்பட்டது. இரவுப் பார்வைச் சாதனங்கள் போன்றவற்றை சிரியா தனது எல்லையூடாக ஈராக்கிற்கு அனுப்பியதாக அமெரிக்கா குற்றம் சாட்டியதோடு, இதற்கான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரலாம் எனவும் எச்சரித்தது.

இதை ஒத்த எச்சரிக்கைகள் பின்னர் அதிகரித்ததோடு, அதன் தொனியும் கடுமையாகியது. சதாம் ஹுசைன் கவிழ்க்கப்பட்டதும், அவரது ஆதரவாளர்கள் தப்பிஓடவும், ஒழிந்து வாழவும் சிரியா உதவியதாக குற்றம் சாட்டிய அமெரிக்கா, ஈராக்கின் இரசாயன ஆயுதங்கள் சிரியாவில் மறைத்து வைக்கப்பட்டதாகவும் கூறியது. அத்தோடு, இதன் விளைவுகளைச் சிரியா சந்திக்க வேண்டி வரும் எனவும் எச்சரித்து வருகின்றது.



இது மாத்திரமல்ல, சிரியா மீதான தனிப்பட்ட குற்றச்சாட்டாக ஹமாஸ், கிஸ்புல்லா போன்ற பலஸ்தீன விடுதலை இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவும், அவற்றிற்கு சிரியா உதவி வருவதாகவும் அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. மேலும், இக்குற்றச்சாட்டுக்கள் விடுவிக்கப்பட்ட தொனியானது சிரியா மீது யுத்தம் ஒன்றை நடத்த அமெரிக்கா தயாராக உள்ளது போன்றதொரு தோற்றப்பாட்டை வெளிப்படையாகவே கொடுத்தது.

இவற்றை நோக்குகையில், ஈராக் மீதான யுத்தநிறுத்தத்திற்கு அமெரிக்கா நேரடியாகவும், வெளிப்படையாகவும் கூறிக்கொண்ட காரணிகளுக்கு அப்பாலும் காரணிகள் உள்ளன என்பதும் அவை மிகவும் முக்கியமானவையாகவும் மேற்காசியாவின் அரசியலில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததவையாகவும் இருக்கும் என்றே கொள்ள முடியும்.

அதாவது, மேற்காசியாவின் இராணுவச் சமநிலையானது இஸ்ரேல் எதிர் அரபு நாடுகள் என்ற ரீதியில் பேணப்படுவதாகும். இதில் அரபு நாடு களில் ஈராக், சிரியா என்பன முக்கியமானவையாகும். ஏனைய அரபு நாடுகள் குறிப் பாக சவுதி அரேபியா போன்றவை அமெரிக்கா ஆதரவு சக்திகளாகவும், லெபனான் போன்றவை பலவீனமானவையாகவும் உள்ளமை காரணமாக இச்சமநிலையில் அவற்றின் பங்கு காத்திரமானவையாக இல்லை.

இதேவேளை, மத்திய கிழக்கில் குறிப்பாகப் பலஸ்தீனத்தை மையமாகக் கொண்டு செயற்படும் ஹமாஸ் போன்ற தீவிரவாத இயக்கங்கள் தற்பொழுது மேற்கொண்டு வரும் தற்கொலைத் தாக்குதல்கள் இஸ்ரேலுக்கு இதுவரையில் இல்லாத நெருக்கடிகளைத் தோற்றுவித்து வருகிறது. இத் தீவிரவாத அமைப்புகளுக்கு சிரியா போன்ற நாடுகளின் தார்மீக ஆதரவு கிடைக்கப்பெற்று வருவது அமெரிக்காவையும், இஸ்ரேலையும் பொறுத்து சீற்றத்தை கொடுப்பதாகவே உள்ளது.

இந் நிலையில், ஈராக்கிற்கு அடுத்ததாக சிரியாவையும் பலவீனப்படுத்துவதன் மூலம் மேற்காசியாவில் இஸ்ரேலின் மேலாதிக்கத்தை அமெரிக்காவினால் நிலைநிறுத்தமுடியும். இது மத்திய கிழக்கில் ஸ்திரமற்ற அரசியல் நிலைக்குக் காரணமாகவுள்ள பலஸ்தீனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வொன்றைக் காண உதவக்கூடும். அதாவது இஸ்ரேலை பலப்படுத்துவதாக மட்டு மல்ல, மேற்காசியாவில் அமெரிக்காவின் செல்வாக்கை நேரடியாக அதிகரிப்பதாகவும் அமையக்கூடியதாகும்.

ஆகையினால் தற்பொழுது சிரியா மீது திரும்பியுள்ள அமெரிக்காவின் பார்வையானது, சிரியா மீது தாக்குதல் ஒன்றை அமெரிக்கா நடத்தலாம் என்ற அளவிற்கு அபிப்பிராயத்தைத் தோற்றுவிப்பதாகியுள்ளது. அமெரிக்காவின் போக்குக் குறித்து ஐ.நா பொதுச் செயலாளர் கொபி அனான் வெளிப்படையாகக் கவலை தெரிவிக்கும் அளவிற்கு நிலைமை உள்ளது என்பதே யதார்த்தமாகும்.

இந்நிலையில், தற்பொழுது எழும் கேள்வி ஈராக்கைத் தொடர்ந்து சிரியா மீது அமெரிக்கா தாக்குதலைத் தொடுக்குமா? என்பதே. ஈராக் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் போன்று சிரியா மீதும் அமெரிக்கா குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றமை இதற்கான வாய்ப்புக்களை நிராகரிக்கப்பட முடியாதவை ஆக்கியுள்ளன.

இதேவேளை அமெரிக்கா சிரியா மீது ஒரு யுத்தத்தை நடத்துமானால், அதன் விளைவானது மேற்காசியாவில் இராணுவச் சமநிலை, அரசுகளின் எல்லைகள் என்பவற்றில் மட்டுமல்ல, பூகோள ரீதியிலான இராணுவச் சமநிலை மற்றும் அரசியல் சூழ்நிலைகளில் கூட மாற்றங்களைத் தோற்றுவிப்பதாகவே இருக்கும்.

ஜெயராஜ்

# படையினர் நிலைகொண்டுள்ளதால் யாழ்.இல் விவசாய உற்பத்திகள் பாதிப்பு

## விவசாயிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

1983 ஆம் ஆண்டில் யாழ் மாவட்ட நுகர்விற்கு அப்பால் இலங்கைத்தீவு முழுவதிற்கும் விவசாய உற்பத்தியை சந்தைக்கு அனுப்பிய யாழ்ப்பாண விவசாயிகள் இன்று சிறிலங்காப் படையினரின் ஆக்கிரமிப்பினால் தமது முழுமையான உற்பத்திகளைமேற்கொள்ள முடியாதுள்ளதாக யாழ் .மாவட்ட விவசாயிகள கூட்டுறவுச் சங்கம் கூறியுள்ளது.

மரக்கறி பயிர்ச்செய்கைக்கு பேர் போன வலிகாமத்தின் பயிர்ச் செய்கை நிலங்கள் சிறிலங்காப் படையினரின் உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ளது. இதனால் பயிர்ச்செய்கை வழமைக் குத் திரும்ப முடியாதுள்ளது என யாழ் அரச செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## அபிவிருத்தியில் பங்காளராகுக!

(யாழ்ப்பாணம்)

அரச உத்தியோகத்தர்கள் எந்தத்தரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் அவர்கள் அபிவிருத்திப் பங்காளர்களாக செயற்பட்டு மீள் குடியமர்வு, புனர்வாழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டுமென யாழ் .அரச அதிபர் பத்மநாதன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஊர்காவற்றுறைப் பிரதேசச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு கூறி யுள்ளார். தீவகப் பிரதேசம் ஆரம் பத்தில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக இருந்தது. தற்போது அம்மக்களில் பலர் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்களை மீளக்குடியமர்த்தி அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## மீட்டல் வகுப்பு

பட்டப்படிப்பு கல்விடிப்பிளோமா பகுதி-1 ஆசிரிய மாணவர்களுக்கான உளவியல் பாட மீட்டல் வகுப்புக்கள் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவு ஆசிரியர் கல்வி வளநிலையத்தல் கல்வி பயின்று வருகின்ற ஆசிரிய மாணவர்களுக்கான மேற்படி மீட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் 19ம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.க. சரவணபவன் தெரிவித் துள்ளார்.

## பெற்றுக்கொள்ளவும்

தேசிய அடையாளஅட்டை, குடும்பப்பதிவு அட்டை என்பவற்றுடன் கறுப்புப் பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கதிர்காமு தவமணி தேவி 567192083V, 2ஆம் வட்டாரம் கோம்பாவில், புதுக்குடியிருப்பு என்பவரது அடையாள அட்டையுடனான பையே கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் யாழ்.சாலையிலுள்ள கிளி. ஈழநாதம் பணிமனையில் பெற்றுக்கொள்ளவும்.


## கிளிநொச்சி கச்சேரி கேள்வி கோரும் அறிவித்தல்

2003.04.02.ஆம் திகதிய ஈழநாதம் பத்திரிகை கேள்வி அறிவித்தலின்படியும், 2003.04.03 திகதிய திருத்தத்தின் படியும் கிளிநொச்சி மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம் கட்டட நிர்மாண வேலைக்கான கேள்வி கோரும் அறிவித்தலுக்கான காலநேரங்கள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

01. கேள்விப்படிவங்கள் 2003.04.22ஆம் திகதி பி.ப. 4.45 மணிவரை வழங்கப்படும்.

02. கேள்விகள் 2003.04.25ஆம் திகதி மு.பகல் 11 மணியளவில் இவ் அலுவலகத்தில் திறக்கப்படும்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி.8080)

## கிறீன்வே அக்கடமி

கிறின்வே அக்கடமி கனகபுரம் கிளிநொச்சியில் ஆரம்பமாகின்றது. 18-04-2003 வெள்ளிக்கிழமை A/L 2005. 5.00 மணிக்கு விஞ்ஞானம், கலைப்பிரிவுகள் O/L டேக்கிளாஸ் 4.00 மணிக்கு.

(2840)

## போதனாசிரியர்களிற்கான விண்ணப்பங்கோரல்

யூனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி.வலயக் கல்விப்பணிமனையின் முறைசாராக்கல்விப் பிரிவினரால் நடாத்தப்படவுள்ள,

1) நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல்
2) ஈருருளி (சைக்கிள்) திருத்துதல்

ஆகிய பாடநெறிகளைப் போதிப்பதற்கான போதனாசிரியர்கள் தேவையாகவுள்ளனர்.

*தகைமை –*

தொழில்நுட்பக் கல்லூரிச் சான்றிதழ்
முறைசாராக் கல்விச் சான்றிதழ்
இவைக்குச் சமமான வேறு சான்றிதழ்கள்

நியமனம் பெற விரும்புபவர்கள் 30.04.2003 க்கு முன்னர் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப்படிவங்களை உதவிக் கல்விப்பணிப்பாளர், முறைசாராக் கல்விப்பிரிவு, வலயக் கல்விப் பணிமனை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்ப வைக்கவும்.

ப.அரியரத்தினம்,
கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி.8079)

## இலவச தொழிற்றிறன் பயிற்சிநெறிகள்

யூனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடாத்தப்படவுள்ள தொழிற்றிறன் பயிற்சி நெறிகளிற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**தொழிற்றிறன் பயிற்சிநெறிகளின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | தட்டச்சுப் பயிற்சி | 06 மாதம் |
| 2. | ஈருருளி(சைக்கிள்) திருத்துதல் | 06 மாதம் |
| 3. | நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் | 06 மாதம் |
| 4. | கனரக வாகனமோட்டுதல் பயிற்சி | 08 மாதம் |
| 5. | பனம்பொருள் உற்பத்தி | 06 மாதம் |
| 6. | சிகை அலங்காரமும் ஒப்பனையும் (ஐசிங்)கேக்அலங்காரம் | 06 மாதம் |

தகைமை:-

17 வயதைப் பூர்த்தி செய்தவர்களாகவும் 30 வயதிற் குட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும். தட்டச்சுப் பயிற்சிக்கு மாத்திரம் க.பொ.த(சா/த) பரீட்சையில் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதி 27.04.2003 .விண்ணப்பங்களை வலயக்கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி8078)

## MICRO COMPUTER SYSTEM

No-489, Harawapothana Road, Rambaikulam,
Vavuniya, Srilanka.

**அனைவருக்கும் கணினிக் கல்வி**

1. *சிறுவர் கணினி அமைப்பு*
2. *இளைஞர் கணினி அமைப்பு*
3. *தொழில் செய்வோர் கணினி அமைப்பு*

முற்றிலும் பட்டதாரி ஆசிரியர்களினால் சகல பிரிவுக்குமான கணினி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(சி.7851)

## பணிநிலை வெற்றிடம்

மருதம் வாணிபத்தில் பின்வரும் பணிநிலைக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**கணக்குப் பதிவாளர்**

**கல்வித்தகைமை:**

- ☐ க.பொ.த (உ/த) இல் வர்த்தகப் பிரிவில் தேறியிருத் தல் வேண்டும்.
  அல்லது
- ☐ க.பொ.த (சா/த) இல் தமிழ், கணிதம் ஆகியவற்றில் திறமைத் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.
- ☐ கிளிநொச்சி,மல்லாவிப் பிரதேசங்களை வதிவிடங்களாகக் கொண்டவர்கள் விரும்பத்தக்கது,

வேண்டுகை முடிவுநாள் - 22.04.2003

வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:

பணிப்பாளர்,
மருதம் வாணிபம்,
கண்டிவீதி, கிளிநொச்சி.

(3091)

## ஆரோக்கியா மெடி கிளினிக் அன்ட் பார்மசி

துலைசிறந்த வைத்திய சேவையையும்-
ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளவும்-

ஆங்கில மருந்து வகைகள்
அழகு சாதனப் பொருட்கள்
பால்மா வகைகள்

குழந்தைகளின் உணவு வகைகளையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

ஆரோக்கியா மெடி கிளினிக் அன்ட் பார்மசி

40A, கண்டிவீதி, வவுனியா.
முன்னாள் முருகன் மருந்தக உரிமையாளர்,
விசுவமடு.

(சி.7852)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக் கிளை

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு (மே-08) இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் கிளி. மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்படும் செஞ்சிலுவைச்சங்கம் பற்றிய அறிவை அளவிடும்.

**போட்டிப் பரீட்சை**

மேற்படி பரீட்சை எதிர்வரும் 30.04.2003 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க கிளை அலுவலகத்திலும், கரைச்சி கண்டாவளை,பூநகரி, பளை பிரிவுகளின் கிளை அலுவலகங்களிலும் பெற்று எதிர்வரும் 25.04.2003 ஆம் திகதிக்கு முன் அவ்வவ் கிளைச் செயலகங்களிலேயே சமர்ப்பிக்கவும்.

பரீட்சையில் 1ஆம்,2ஆம், 3ஆம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் எதிர்வரும் 08.05.2003ஆம் திகதி அன்று வழங்கிக் கௌரவிக்கப்படும்.

☐ விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்து கையளிக்கும்போதே தங்களுக்கான அனுமதி அட்டைகளையும் பெற்றுக்கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு
பரப்புரை/ தகவல் பிரிவு, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சி மாவட்டக்கிளை.

கௌரவ செயலாளர்,
இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கம்,
கிளிநொச்சி மாவட்டக்கிளை.

(சி-8074)



சிந்தனைக்கு

அந்நிய காலனித்துவ ஊடுருவல் எமது சுதேசிய பொருளாதாரக் கட்டுக் கோப்பைச் சீர்குலைத்தது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM
யாழ். சாலை, கிளிநொச்சி. 17-04-2003

## எதிர்பார்க்கைக்கு ஏற்ப.....!

சிறிலங்கா அரசாங்கம் எதிர்பார்க்கும் பெருந்தொகை நிதி உதவி டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்குவோர் மாநாட்டில் கிடைக்கப்பெறலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை டோக்கியோ மாநாட்டிற்கு முன்னோடி மாநாடாக நடந்த வாஷிங்டன் மாநாட்டின் நிகழ்வுகளே வெளிப்படுத்துபவையாய் உள்ளன.

அமெரிக்கா உள்ளிட்ட சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் அனைத்தும் சிறிலங்காவிற்கு உதவி வழங்குவதற்குத் தயாராக இருப்பதாகவே நிகழ்வுகள் வெளிப்படுத்துகின்றன. ஆகையினால், டோக்கியோ மாநாட்டில் சிறிலங்கா எதிர்பார்த்த நன்மையை அடையும் என்றே கூறலாம்.

இவ்வாறு சிறிலங்காவிற்குப் பெருந்தொகை நிதியை உதவி வழங்குவோர் வழங்க முன்வந்தமைக்குச் சமாதான முயற்சிகள் முன்னேற்றகரமான முறையில் செயற்படுவதாகவும், சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் அதற்கு ஒத்திசைவான செயற்பாட்டைக் கொண்டிருப்பதாகவும் கருதுகின்றமையே காரணமாகும். அதாவது, சமாதான முயற்சிகள் முன்னேற்றம் காணும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஆகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமாதான முயற்சிகள் குறித்து முன்னேற்றகரமான நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டுள்ளது என்பது நிராகரிக்க முடியாததொன்றே. இதனால், சில நெருக்கடிகளையும் அரசாங்கம் சந்தித்து வருகின்றது என்பதும் உண்மையே. இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமாதான முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகள் சிலவற்றில் தீவிர செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை என்பதும் நிராகரிக்கமுடியாததே.

குறிப்பாக புரிந்துணர்வு உடன்பாடு செய்யப்பட்டு ஓராண்டுகளைக் கடந்துவிட்ட நிலையிலும் அவ்வுடன்பாட்டில் பல சரத்துக்கள் இன்னமும் நிறைவு செய்யப்படவில்லை. அதாவது, அவ்வுடன்பாட்டின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றான மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவித்தல் என்ற இலக்கு எட்டப்படுவதற்கு முழு அளவிலான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

இது ஒரு புறம் இருக்கத்தக்கதாக - யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடும் ஆயுதப்படைகளின் நடவடிக்கைகளையும் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தினால் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாததொரு நிலையே காணப்படுவது போன்றுள்ளது. சனாதிபதியின் பணிப்பிலோ அன்றித் தான்தோன்றித்தனமாகவோ படைத்தரப்பின் யுத்தநிறுத்த மீறல்களும், அடாவடித்தனமும் நீடித்தவண்ணமே உள்ளன.

இவை தவிர, அரசாங்கத்தின் செயற்பாடுகள் சமாதான முயற்சிகள் மீதான நம்பகத் தன்மையையும் கூடக் கேள்விக்குள்ளாக்கியுள்ளன. அதாவது, சமாதான முயற்சிகளின் சமபங்காளிகளாக விடுதலைப் புலிகள் இருக்கையில், அவர்களை ஓரம்தள்ளி, நடைபெறும் நிகழ்வுகளில் அவர்களின் பங்கேற்பிற்கு அரசாங்கம் முயற்சிக்காமையானது அரசாங்கத்தின் நோக்கம் குறித்து சிந்திக்க வேண்டிய நிலையை உருவாக்குவதாகவுள்ளது.

இந்த வகையில், சமாதான முயற்சிகள் குறித்து அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் சர்வதேச ரீதியில் பெறப்பட்டுள்ள வரவேற்பிற்கேற்ப களநிலையில் முன்னேற்றம் கண்டுள்ளதா என்பதற்கு உறுதியாகப் பதில் அளித்தல் கடினமானதாகவே இருக்கும். அதாவது, சமாதானத்தின் அமுலாக்கம் முழு அளவில் சீர் செய்யப்பட்டதாக இல்லை.

ஆகையினால், சமாதானத்தின் பெயரில் பெருமளவான நிதியைப் பெற வாய்ப்பைப் பெற்றுள்ள ரணில் அரசாங்கம் சமாதான முயற்சியில் காட்டும் ஆர்வமும், அதனை முன்னெடுப்பதில் காணப்படும் அக்கறையுமே அதற்கு அடித்தளமாக அமையக்கூடியவையாகும். ஆகையினால், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமாதான முயற்சிகளில் காட்டும் அக்கறையே அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கத்தக்கதாகும்.

இந்நிலையில், சமாதானம் நிலைத்து நிற்பதற்கு இடையூறாகவுள்ளவற்றை அகற்றுவதற்கு அரசாங்கம் முன்வருதல் அவசியமானதாகும். அத்தோடு, சமாதானத்தின் பங்குதாரர்களாக விடுதலைப்புலிகளுக்கு உரிய இடம்கிட்டுவதற்கும் அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் சமாதானமென்பது உறுதியான அடித்தளத்தில் கட்டப்படாததொன்றாகிவிடும்.

# இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் தாமதிக்கக் கூடாது

### அமைச்சர் மிலிந்த மொறகொட

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு சர்வதேச நாடுகள் தாமதிக்கக்கூடாது என சிறிலங்காவின் பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார். வாஷிங்டன் மாநாட்டில் இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்து உரையாற்றும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஆயிரக்கணக்கான தமது நாட்டுப் பிரஜைகள் உயிரைக்கொடுத்த இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வைக் காணுமாறு எதிர்பார்க்கமுடியாது என அவர் கூறியுள்ளார். கடந்த 20 வருட போர் மக்களின் உடல் மற்றும் உள்ளங்களை காயப்படுத்தியுள்ளதாகவும், இதனால் பயமும், நம்பிக்கையற்ற தன்மையும் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சமாதான பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து தீர்வு எட்டப்பட்ட பின்னரே பொருளாதார உதவிகளை வழங்கமுடியும் என சில நாடுகள் முடிவெடுத்துள்ளமை குறித்து அவர் கருத்துக் கூறியுள்ளார். சமாதானத்தின் பலன்களை மக்களிடம் எடுத்துக்காட்டாது விட்டால் பேச்சுவார்த்தையில் இரு தரப்பினரும் சோர்வடைந்து விடுவார்கள் எனவும் பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பொலிசாருக்கு சவால் விடும் வகையில் அரசியல்வாதிகள் செயற்பட அனுமதியோம்!

### பொலிஸ்மா அதிபர் கூறுகிறார்

(கொழும்பு)

பொலிசாரின் கடமைகளுக்கு சவால்விடும் வகையில் செயற்படும் அரசியல்வாதிகளின் அடாவடித்தனங்களுக்கு ஒரு போதும் இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிசார் கண்டிப்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

பொலிசார் தமது நடவடிக்கையின்போது கட்சி அரசியல் நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது. சட்டவிதிகளுக்கு அமைய நிர்வாக ரீதியான கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும்.

தமது கடமையின் போது கட்சி அரசியல் நடவடிக்கைகளுக்கு இடம்கொடுக்கக்கூடாது. சட்ட விதிகளுக்கு அமைய நிர்வாக ரீதியான கடமைகளை சரிவரச் செய்ய வேண்டும். தமது கடமைகளின் போது மனிதாபிமான தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கியும், மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தும் நடக்க வேண்டிய கடப்பாடு பொலிசாருக்கு உள்ளது.

இதன் அடிப்படையில் கடமைகளை நிறைவேற்றும் பொலிசாருக்கு எதிராக அரசியல் சக்திகளோ வேறு சக்திகளோ அழுத்தம் கொடுக்க முனைந்தால் அவ்வாறான சக்திகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க பொலிசாருக்கு உரிமையுள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தேசியப் பாடசாலைகளில் பற்சிகிச்சை நிலையங்கள்

நாடு முழுவதிலும் உள்ள சகல தேசிய பாடசாலைகளிலும் பற்சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்கு சுகாதார மற்றும் போசாக்கு விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்வியமைச்சுடன் இணைந்து இந்தபற்சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்படும் என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். இதற்குத் தேவையான வைத்தியர்களும், உபகரணங்களும் சுகாதார அமைச்சினால் வழங்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

## பறவைக் காவடியுடன் வந்த உழவு இயந்திரம் குடைசாய்வு!

### ஒருவர் காயமடைந்தார்

(முறிகண்டி)

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தடியில் பறவைக் காவடியுடன் வந்த உழவு இயந்திரப்பெட்டி குடைசாய்ந்ததில் இருவர் தேங்காய்த் தொட்டியில் தூக்கி வீசப்பட்டனர். அத்தோடு ஒருவர் குடை சாய்ந்த பெட்டியினுள் சிக்குண்டு காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 7.00 மணியளவில் இடம்பெற்றது.

செடில் குத்துபவரான முரளி என்பவரே காயமடைந்தார். இவர் உடனடியாக மருத்துவமனை கொண்டு செல்லப்பட்டார்.

காவடி எடுத்த இருவரும் மற்றையவர்களும் எவ்வித பாதிப்புமின்றி தப்பிக்கொண்டனர். (09)

## —குழப்பம்—

உடையார் கட்டு-கிளிநொச்சி பயணத்தின் போது தமிழீழ போக்குவரவுக் கழக பேருந்திற்கு பயணச் சிட்டைக்கு ஐப்பது ரூபாய் அறவிடப்படுகிறது. அதேதினம் கிளிநொச்சியிலிருந்து உடையார்கட்டிற்கு பயண சிட்டைக்கட்டணமாக தனியார் பேருந்திற்கு அறுபது ரூபாய் கட்டணம் அறவிடப்படுகிறது.

இந்தப் பயணத்தின் வழித்தடமானது உடையார்கட்டு- வட்டக்கச்சி-கிளிநொச்சி ஊடானதாகும் இந்த கட்டண வேறுபாடு ஏற்படுவதற்கான காரணம் என்னவென பயணிகள் வினாவெழுப்புவதுடன் இதையிட்டு உரிய பகுதியினர் கவனத்திலெடுக்க வேண்டுமென அவர்கள் கோருகின்றனர். (19)

## சிறிலங்கா கிரிக்கெட் அணியின் இடைக்காலப் பயிற்றுநராக டுலிப் மெண்டிஸ்


சிறிலங்கா கிரிக்கெட் அணியின் இடைக்கால பயிற்றுநராக சிறிலங்கா அணியின் முன்னாள் தலைவர் டுலிப் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட நியூசிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடருக்கும், இதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள சிறிலங்கா, நியூசிலாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் பங்கேற்கும் மும்முனை ஒருநாள் போட்டித் தொடருக்கும் சிறிலங்கா அணியின் இடைக்கால பயிற்றுநராக டுலிப் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறிலங்கா அணியின் பயிற்றுநராக இருந்து வந்த டேவ் வட்மோரின் பதவிக் காலம் வரும் மே உடன் முடிவடைகின்றது. இருப்பினும் இக்காலத்திற்கு முன்பே அவர் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்தே இடைக் கால பயிற்றுனர் ஒருவரை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முழுநேரப் பயிற்றுநர் ஒருவரை நியமிப்பதற்கான முன்முயற்சிகளிலும் தீவிரமாக இறங்கியுள்ளது.

## செரீனா வில்லியம்ஸ் அதிர்ச்சி தோல்வி



அமெரிக்காவின் சார்லெஸ்டனில் நடைபெறும் ∴பெமிலி சர்க்கிள் கிண்ண டென்னிஸ் தொடரின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்சுக்கு பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் அதிர்ச்சித் தோல்வி அளித்தார்.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் ஹெனின் 6-3, 6-4, என்ற விகிதத்தில் வெற்றி பெற்றார்.

இதற்கு முன்னர், தொடர்ந்து 21 ஆட்டங்களை வென்றுள்ள செரீனா, இந்த ஆண்டு பெற்றுள்ள முலாவது தோல்வி இதுவாகும்.

இதற்கு முன்னர் 2002 நவம்பரில் டூர் சாம்பியன் ஷிப்பில் பெல்ஜியத்தின் கிம் கிளிஜ்ஸ் டர்ஸி-டம் செரீனா தோல்வியுற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இல.யின் சமாதான நடவடிக்கைகளுக்கு சர்வதேச சமூகம் ஒத்துழைக்க வேண்டும்!

### ஹொலிவூட் நடிகை அஞ்சலினா ஜோதி கோரிக்கை

இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் ஹொலிவூட்டின் பிரபல நடிகையும் ஐக்கிய நாடுகளுக்கான கௌரவத் தூதுவருமான அஞ்சலினாஜோதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல திரையுலக விருதுகளை வென்ற ஜோதி, சமூக சேவைகளின் பொருட்டு ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க மற்றும் வறுமையில் வாழும் ஆசிய நாடுகளுக்கு விஜயம் செய்து வருகின்றார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வரும் நாடுகளுக்கு வழங்கி வரும் உதவிகளில் சிறு உதவியாக யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு உதவிகளை வழங்க எதிர்ப்பார்த்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சீன மீனவர்களுக்கு சிறிலங்கா நிவாரண உதவி!

(கொழும்பு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் சீனப் படகு தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த 15 சீன மீனவர்களுக்கு நிவாரண உதவி வழங்க சிறிலங்கா அரசு முன் வந்துள்ளது.

எனினும் சீனப்படகு தாக்கியழிக்கப்பட்ட சம்பவத்துக்கு சிறிலங்கா அரசு ஏந்த வகையிலும் பொறுப்பேற்கமுடியாது என்றும் நல்லெண்ண நடவடிக்கையாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் வெளியுறவுத் துறை அமைச்சர் டிரோன் பொர்னாண்டோ அறிவித்துள்ளார்.

இதற்கான அமைச்சரவையின் ஒப்புதல் மிக விரைவில் வழங்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# 4 ஏக்கர் நெற் சூடு தீயில் எரிந்து நாசம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பன்னங் கண்டிப் பகுதியில் நேற்று நான்கு ஏக்கர் நெற் சூடு தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இராசையா கமத்தில் இந்த அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

பக்கத்து வயலில் வைக்கோலிற்கு வைக்கப்பட்டிருந்த தீ இந்த நெற்சூட்டிற்கு பரவியதாகக் கூறப்படுகின்றது. இந்த தீ விபத்தினால் உரிமையாளருக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

### சந்திரிகா டாக்கா பயணம்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நாளை மறுதினம் பங்களாதேஷ் செல்லவுள்ளார்.

இவ் விஜயத்தின் போது அந்நாட்டு சனாதிபதி பேராசிரியர் இஜ!டின் அகமட் மற்றும் வெளிறவு அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளார்

### - ஈராக்கிலிருந்து சிரியா செல்லும் -

## எண்ணைக் குழாய்கள் அமெ. இராணுவத்தால் அடைப்பு!

(லண்டன்)

ஈராக்கின் தென்பகுதி எண்ணைக்கிணறுகளில் இருந்து சிரியாவுக்கு கடத்தப்பட்ட எண்ணைய்க் குழாய்களை அமெரிக்காமூடிவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சிரியாவுக்கு ஆண்டொன்றுக்கு கிடைத்துக்கொண்டிருந்த ஒரு பி[illegible]யன் டொலர் வருமானத்தை அ[illegible]ரிக்கா அடைத்துள்ளது.

ஏற்கனவே நலிவடைந்து போயுள்ள சிரியாவுக்கு இது ஒரு பெரும் அடியாக அமைந்துள்ளது. இது ஆண்டொன்றுக்கு சிரியா பெற்று வந்த மொத்த செல்வத்தில் ஐந்து சதவீதம் என்று கூறப்படுகின்றது.

ஆனால், இந்த இழப்பு சிரியாவுக்கு ஆச்சரியமான எதிர்பாராத ஒன்றுமல்ல. எப்பொழுதாவது ஒரு நாள் அமெரிக்கா இந்த சட்டவிரோத ஈராக் எண்ணைக் கடத்தல் வர்த்தகத்தை மூடிவிடப் போகின்றது என்று சிரியாவின் ஆட்சியாளர்கள் எதிர்பார்த்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

### அட்டாளைச்சேனை பி.செ.பிரிவில்

# 350 குடும்பங்களை குடியமர்த்த நடவடிக்கை!

(மட்டக்களப்பு)

வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்புத் திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனை, பிரதேச செயலகப் பிரிவில் 350 குடும்பங்களை அடுத்த மாதம் குடியமர்த்தவுள்ளதாக செயலர் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை சம்பு நகர், அக்பர் நகர் ,ஒலிவில் ஆலிம் நகர் ஆகிய கிராமங்களில் இருந்து 1980 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தவர்களே இவ்வாறு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டு உபகரணங்கள் தங்காலிக இருப்பிட வசதி உட்பட அடிப்படை வசதிகளுக்கென்று முதல்கட்டமாக ஒரு குடும்பத்திற்கு 25000 ரூபா வழங்கப்படவுள்ளது. அதனை அடுத்து இரண்டாம் கட்டமாக வீடமைப்புக்கென்று50,000 ரூபா வழங்கப்படவுள்ளதுடன் மூன்றாம் கட்டமாக வீதிப்புனரமைப்பு மற்றும் மின்சார வசதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதேச செய[illegible] தெரிவித்துள்ளார்.

### மீள் குடியே...

தொடர்பான அமைச்சும் ஐக்கிய நாடுகிள் அகதிகளுக்கான ஆணையாளர் அலுவலகமும் ஒன்றிணைந்து நடத்திய ஆய்வின் மூலம் இந்த தகவல் அறியப்பட்டுள்ளது.

வடகிழக்கிலிருந்து வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளோருக்கு மேலதிகமாக இடம் பெயர்ந்து வெளிநாடு களில் வசிக்கும் இரண்டு இலட்சத் துக்கும் அதிகமான குடும்பங்களும் உள்ளனர் என்றும் மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறிலங்காவில் ஆசிய பசுபிக் பொருளாதார சமூக ஆய்வு!

(கொழும்பு)

2003ஆம் ஆண்டுக்கான ஆசிய பசுபிக் பொருளாதார மற்றும் சமூக ஆய்வு சிறிலங்காவில் நடைபெறவுள்ளது.

சர்வதேச பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில் ஆசிய, பசுபிக் நாடுகளின் பொருளாதாரம் சமச்சீராகக் காணப் படுவது குறித்து இந்த ஆய்வில் ஆராயப்படும் என்று தெரிவிக் கப்படுகின்றது.

எதிர்வரும் 23ஆம் திகதி சிறிலங்காவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் வளாகத்தில் இந்த ஆய்வு நடவடிக்கை முறையாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

# நக்கீரன் கோபால் மீது பொடோவின் கீழ் வழக்கு!

(சென்னை)

தமிழகத்தின் பிரபல சஞ்சிகையான நக்கீரனின் ஆசிரியர் கோபால் மீது பொடோ சட்டத்தின மீது தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தமிழகத்தில் கோபால் உட்பட இதுவரை 42 பேர்பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்ட கோபால் மீது கைத்துப்பாக்கி வைத்திருந்தது உட்பட பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை கோபால் பிணை வழங்குமாறு கோரி நீதிமன்றில் மனுச்செய்துள்ளார்.

## கனகம்புளியடிச் சந்தியில் புதிய முகாம் சிறிலங்கா இராணுவம் ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தென்மராட்சியில் கனகம் புளியடி சந்தியில் தென்னந் தோப்பு ஒன்றினுள் புதிய முகாம் ஒன்றை அமைக்க சிறிலங்கா இராணுவத்தினர் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

சரசாலையிலுள்ள முகாமை தென்னந்தோப்பிற்கு மாற்றும் நோக்கோடு இந்த புதிய முகாம் அமைக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளனர். சரசாலையில் உள்ள முகாம் 1996 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

## ரணிலின் சீனவிஜயம் ரத்து

(கொழும்பு)

'சார்ஸ்' நோயின் அச்சுறுத்தல் காரணமாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சீனாவுக்கான விஜயத்தை ரத்துச்செய்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதி பீக்கிங் செல்வதற்கு பிரதமர் ரணில் தீர்மானித்திருந்தார். ஆனால் "சார்ஸ்" அச்சுறுத்தல் தொடர்ந்து சீனாவில் இருப்பதால் விஜயத்தை ரத்துச்செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### - முஸ். காங்கிரஸ் மீதான அவதூறு -

## ஐ.தே.க. உறுப்பினர் மீது உடன் நடவடிக்கை!

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீது ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அடிக்கடி தெரிவித்துவரும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் அவதூறுகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் ரணில் தீர்மானித் திருப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தொலைபேசியில் பிரதமர் தன்னிடம் உரையாடியபோது இவ்வுறுதிமொழியை தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்காக முஸ்லிம் காங்கிரஸுடன் இன்று கலந்துரையாடுவதற்கு கொழும்புக்கு வருமாறு பிரதமர் அழைப்பு விடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

மூதூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஐக் கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தம்மீதும் தமது கட்சி மீதும் குற்றஞ்சாட்டியதால் பிரதமர் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் வரை தாம் மூதூரில் இருக்கப போவதாக ரவூப் ஹக்கீம் அன்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "இன்ராட் 2003" ஏற்றுமதிக் கண்காட்சி

(கொழும்பு)

வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவரும் நோக்கிலும், நாட்டின் பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும் இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள "இன்ராட் 2003" ஏற்றுமதி முதலீட்டு கண்காட்சி எதிர்வரும் செப்டம்பர் 5ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் புதிய கண்காட்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையை மீளக்கட்டியெழுப்புதல், எமது உட்கட்டமைப்பில் முதலீடு செய்யுங்கள் என்ற தொனிப்பொருளில் இந்தக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அசோக டிஇஸட் குணசேகர இங்கு கருத்து தெரிவிக்கையில்; அனைத்து முதலீடுகளுக்கான சந்தர்ப்பமும் உடகட்டமைப்பு அபிவிருத்திக்கான வாய்ப்புக்களும் இந்த கண்காட்சியின் ஒரே கூரையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் மிகப்பெரிய பொருளாதார நிகழ்வாக "இன்ராட் 2003" கருதப்படுவதாக தெரிவித்த இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் இலங்கை முதலீட்டுச் சபை, உட்கட்டமைப்பு முதலீட்டு பணியகம், வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் மற்றும் எமது சம்மேளனக் கிளைகள் என்பன இதற்கு ஒத்துழைப்பு வழங்கிவருகின்றன என்றார்.

### தனிமை....

தாமதப் படுத்தப்படுமாயின் வெற்றிகிட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதி இலங்கையின் தற்போதைய அரசாங்கம் மேற்கொண்ட யுக்திகளால் ஏற்பட்ட பொருளாதார முன்னேற்றமாக தற்போழுதுள்ள முன்னேற்றத்தைக் கொள்ள முடியும் எனக் கூறியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டு.புகையிரத சேவை வாழைச்சேனை மட்டுமே!

(மட்டக்களப்பு)

கொழும்பிற்கும் மட்டக்களப்பிற்கும் இடையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட புகையிரத சேவை கொழும்புக்கும் வாழைச்சேனை புகையிரத நிலையம் வரையே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்புக்கும் வாழைச்சேனைக்கும் இடையிலான புகையிரதப் பாதையை முறையாக செப்பனிட்டு பொறியியலாளர்களின் தரநிர்ணய உறுதிச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னரே மட்டக்களப்பு வரை சேவையை நீடிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஆரம்பமான கொழும்பிலிருந்து மட்டக்களப்பு வரையான சேவையில் ஈடுபட்ட ரயில் நேற்று அதிகாலை இரண்டாவது முறையாகவும் தடம்புரண்டமையே இதற்குக் காரணம் என அறிவிக்கப்படுகிறது.

### சமாதான.....

கடந்த திங்களன்று வாஷிங்டனில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும்போதே கெல்கேசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

### பெற்றோ....

அரசியல் துறை மகளிர் செயலகத்தில் வைத்து வவுனியா மாவட்டபெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தேனிலா அவர்களினால் பெற்றோரிடம் சிறுமி ஒப்படைத்துள்ளனர். (பா)

### கடற்படை....

தாக்குதல்உலங்கு வானூர்தி ஒன்றுடன் சிறிலங்காவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பாதுகாப்பு கப்பலை அமெரிக்க மேர்லர் பிராந்தியத்தில் உள்ள போத்துலே கரையோர பாதுகாப்பு துறைமுகத்தில் நேரடியாகப் பார்வையிட்டதன் பின்னரே அமைச்சர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரையோர பாதுகாப்புக்கப்பல் தற்போது புதுப்பிக்கப்பட்டு வருவதாகவும் மேலதிக வேலைகள் கொழும்பு வந்து சேர்ந்தன் பின்னரே மேற்கொள்ளப்படும் எனவும அமைச்சர் மேலும் தெரிவித், துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.